பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். நேற்றையதினம்கூட இந்த அவையில் நடைபெற்ற நிகழ்வுகளை நமது Information Division பிரிவினர், Film Division பிரிவினர் cassette தயாரித்துக் காண்பிக்கின்றபோது, விழுப்புரம் நகர்மன்றப் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி என்னென்ன பேசினாரோ கிட்டத்தட்ட அவ்வளவையும் காண்பித்தார்கள். அதைப்போலவே, திரு. ஹேமச்சந்திரன் பேசியதையும், திரு. பழனிசாமி பேசியதையும், இதர உறுப்பினர்கள் பேசியதையும், எல்லாவற்றையும் காட்டிவிட்டு அவர்கள் என்ன கருத்து சொன்னார்களோ அதற்கு நாங்கள் சொல்கின்ற பதிலையும் காட்டுகிறார்கள். ஆகவே ஒருதலைப்பட்சமாக நிச்சயமாக இந்த அரசு நடந்துகொள்ளவில்லை. Information பிரிவோ Film Division பிரிவோ, ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்ளவில்லை. இதில் குற்றம் குறை ஏதேனும் இருக்குமேயானால் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரின் பார்வையில்தான், கண்ணோட்டத்தில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே பாரபட்சம் இல்லாமல் எல்லா உறுப்பினர்களுடைய பேச்சுகளும் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். இப்படி பாரபட்சம் இல்லாமல் இருக்கின்ற நேரத்திலே, இந்த அவையிலேகூட எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற அனுமதியைப்போல எல்லாத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கலாமே, அதிலே தவறு இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, அதைப்பற்றி பின்னாலே பேசுவோம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, I am on a point of order.

திரு. இரா. திருமாவளவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். நான் பொதுவாக எல்லாவற்றுக்கும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். அதாவது இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் குறுகிய காலக் கூட்டத் தொடர். இதில் ஏறத்தாழ ஒத்திவைப்புப் பிரச்சினைகள், சிறப்புக் கவன ஈர்ப்பு, கவன ஈர்ப்பு என்று நூற்றுக்கு மேற்பட்டவைகள் வந்திருக்கின்றன. அதிலே எவ்வளவு முக்கியமானவை என்று கருதுகிறோமோ அவைகளெல்லாம் ஒரு நாளைக்கு சில தடவை இரண்டு முறைகூட எடுத்துக்கொண்டு, இரண்டு மூன்றைக்கூட எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். வேறு முக்கியமான பிரச்சினைகள் இருந்தால் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பேசுகிறபோது, நேற்றையதினம் திரு. ஹேமச்சந்திரன் பேசியதைப்போல, திரு. பழனிசாமி பேசியதைப்போல பேசி இருக்கலாம். அதை நேற்று புறக்கணித்து விட்டு, பிரதான எதிர்க்கட்சி போன்றவர்கள் எல்லாம் போய் விட்டார்கள். ஆகவே இன்றைய கூட்டத் தொடரிலே, இன்றைக்கு நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மற்றவைகளைப்பற்றி எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இன்றைக்குச் சூழ்நிலை இல்லை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, point of order.

திரு. இரா. திருமாவளவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. கு. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

4. அறிவிப்புகள்

(அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைக்கும்,